**ஜனவரி – 31**

# TNPSC துளிகள்

- ஜனவரி 29 அன்று "பரிக்சா பே சர்ச்சா 2.0" என்பதின் இரண்டாம் பதிப்பானது டெல்லியின் தல்கட்டோரா அரங்கில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுடன் தேர்வு கால மன அழுத்தத்தை கையாளுவது குறித்துப் பிரதமர் கலந்துரையாடினார்.
- பிரதமர் சமீபத்தில் செங்கோட்டை வளாகத்தின் உள்ளே கீழ்க்காண்பனவற்றை திறந்து வைத்தார்.
    - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அருங்காட்சியகம்
    - யாத்-இ-ஜாலியன் அருங்காட்சியகம் (ஜாலியன் வாலாபாக் மற்றும் முதலாம் உலகப் போர் சம்பந்தப்பட்ட அருங்காட்சியகம்)
    - 1857ன் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் குறித்த அருங்காட்சியகம்
    - திரிஷ்யகலா இந்திய கலைகள் அருங்காட்சியகம்
- ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் வேகமாக 100 விக்கெட்டுகளை வீழ்த்திய வேகப் பந்து வீச்சாளராக இந்தியாவின் முகமது சமி ஆகியுள்ளார். இவர் இந்த சாதனையை 56 போட்டிகளில் அடைந்துள்ளார்.
    - முன்னதாக 59 ஒருநாள் போட்டிகளில் 100 விக்கெட்டுகளை வீழ்த்தி இர்பான் பதான் இந்த சாதனையைப் படைத்திருந்தார்.
- தென்னாப்பிரிக்காவின் அதிபரான சிரில் ரமாபோசா புதுடெல்லியில் IBSA (India-Brazil-South Africa) அமைப்பின் முதலாவது காந்தி-மண்டேலா நினைவு கருத்தரங்க சுதந்திர உரை நிகழ்வில் தனது உரையாடலை வெளிப்படுத்தினார் .
- உத்தரகாண்ட் அரசானது 50 கோடி செலவில் பித்தோர்கார் மாவட்டத்தில் துலிப் தோட்டத்தை உருவாக்க அனுமதி பெற்றுள்ளது. இது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ஸ்ரீநகருக்கு அடுத்து நாட்டில் இரண்டாவதாக அமைய உள்ள துலிப் தோட்டமாகும்.
    - இந்த துலிப் தோட்டமானது ONGC நிறுவனத்தால் அதன் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளது.
- காப்பீட்டு ஒழுங்குபடுத்துனரான IRDAI (Insurance Regulatory and Development Authority) ஆனது உள்நாட்டில் உள்ள முறையான மற்றும் முக்கியமான காப்பீட்டு நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கும் அவர்களுக்கு ஒரு மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு குழுவை அமைத்துள்ளது.
- இந்திய வர்த்தக சபையானது நீடித்த சுற்றுச்சூழல் பிரிவில் சமூகத் தாக்கத்திற்கான விருதினை உலகின் முன்னணி பொதி கட்டுதல் மற்றும் செயலாக்கத் தீர்வு நிறுவனமான டெட்ரா பேக் இந்தியா என்ற நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.
    - நீடித்த சூழலியலை வழங்குவதற்காக டெட்ரா பேக் அமைப்பால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை இந்த விருதானது அங்கீகரிக்கின்றது.
- M.S. சுவாமிநாதன் தலைமையிலான விவசாயிகளுக்கான தேசிய ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையை அறிமுகப்படுத்த டெல்லி அரசானது முடிவு செய்துள்ளது.
    - M.S. சுவாமிநாதன் தலைமையில் விவசாயிகளுக்கான தேசிய ஆணையமானது

2004 நவம்பர் 18 அன்று அமைக்கப்பட்டது.

- நாட்டின் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறை வகிக்கும் முக்கியப் பங்கு குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக இந்தியாவில் தேசிய சுற்றுலாத் தினமானது வருடந்தோறும் ஜனவரி 25 அன்று கொண்டாடப்படுகிறது.
- ஜனவரி 29 அன்று டெல்லியில் உள்ள விஜய் சவுக் பகுதியில் நடைபெற்ற “படைகள் பணிக்கு திரும்புதல் நிகழ்ச்சி” 4 நாட்கள் நடைபெற்ற குடியரசு தினக் கொண்டாட்டத்தின் உச்சக் கட்டத்தினைக் குறிக்கின்றது.
- மகாத்மா காந்தி மறைவின் நினைவு தினத்தைக் குறிக்கும் பொருட்டு வருடந்தோறும் ஜனவரி 30 அன்று தேசிய தியாகிகள் தினம் அல்லது சர்வோதயா தினம் அனுசரிக்கப்பட்டது.
- முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான ஜார்ஜ் பெர்னாண்டஸ் (88) நீண்டகால உடல் நலக்குறைவு காரணமாக காலமானார். இவர் 1998 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றினார். பாதுகாப்பு அமைச்சராக தனது பதவிக் காலத்தில் இவர் 1998 ஆம் ஆண்டு பொக்ரான் அணுகுண்டு சோதனை மற்றும் 1999 ஆம் ஆண்டு கார்கில் போர் ஆகியவற்றை மேற்பார்வையிட்டார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஸ்வஸ்த் பாரத் யாத்ராவின் கீழ் விருதுகள்

- FSSAI-ன் ஸ்வஸ்த் பாரத் யாத்ரா என்ற திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்தமாக சிறந்த மாநிலத்திற்கான விருதை தமிழ்நாடு வென்றுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் சிவகாசி ஆகியவை தமிழ்நாட்டின் சிறந்த மாவட்டங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI - Food Safety and Standards Authority of India) “இந்தியாவில் சரியானவற்றை உண்போம்” என்ற முன்முயற்சியை விரிவாக்கம் செய்வதற்காக ஸ்வஸ்த் பாரத் யாத்ராவைத் துவங்கியது.
- இது ஒரு 100 நாட்கள் நீண்ட, நுகர்வோர் அனைவரையும் சென்றடைவதை நோக்கமாக கொண்ட திட்டமாகும்.

***<u>மற்ற விருதுகள்</u>***

- 3 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையை உடைய சிறந்த மாநிலங்கள் - குஜராத், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா.
- 3 கோடிக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட சிறந்த மாநிலங்கள் - பஞ்சாப், கோவா மற்றும் டெல்லி
- சிறப்பு விருதுகள் - மேகாலயா, ஜம்மு மற்றும் காஷ்மீர் & உத்தரகாண்ட் (மலைப்பாங்கான மற்றும் கடினமான நிலப்பரப்பை பெற்றிருக்கும் போதிலும் சிறந்த பங்களிப்பு)

## பிரதமரின் தமிழக வருகை

- மதுரையில் உள்ள தோப்பூருக்கு அருகே அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்திற்கு (AIIMS - All India Institute of Medical Sciences) பிரதமர் 2019 ஜனவரி 27 அன்று அடிக்கல் நாட்டினார்.
- இதுபோன்ற நிறுவனம் அமைக்கப்படுவது தமிழ்நாட்டில் இதுவே முதன்முறையாகும்.
- இது தவிர, மதுரை ராஜாஜி மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் சிறப்பு வசதிகள் கொண்ட கட்டிடங்களையும் அவர் திறந்து வைத்தார்.

## திருவள்ளுவர் தின விருதுகள்

- சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் தின விழாவில் தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
- பொங்கல் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக திருவள்ளுவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு திருவள்ளுவர் தினத்தினை ஜனவரி 16 அன்று தமிழக அரசு கொண்டாடி வருகிறது.

| பெறுநர் | விருதுகள் |
|---|---|
| **பழ நெடுமாறன்** | காமராஜர் விருது |
| **C. பொன்னையன்** | பெரியார் விருது |
| **சூளுர் கலைப்பித்தன்** | KAP விஸ்வநாதன் விருது |
| **கவிஞர் தியாரூ** | பாரதிதாசன் விருது |
| **டாக்டர் K. கணேசன்** | திரு.வி.க. விருது |
| **M. பாரதி சுகுமாரன்** | பாரதியார் விருது |
| **M. அகிலன்** | பேரறிஞர் அண்ணா விருது |
| **C. ராமகுரு** | அம்பேத்கர் விருது |
| **MG. அன்வர் பாட்சா** | திருவள்ளுவர் விருது |

- இந்த தமிழ் அறிஞர்கள் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டிற்காக இவ்விருதினைப் பெறுகின்றனர்.

# தேசியச் செய்திகள்

## புதிய தொழில் நுட்பங்கள் மீதான கூடுகை

- தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவானது புதுடெல்லியில் இரண்டு நாள் தொழில்நுட்ப கூடுகையைத் தொடங்கி வைத்தது.
- இந்த கூடுகையின் கருத்துரு "அடுத்த தலைமுறை ஆளுமைக்கான தொழில்நுட்பங்கள்" என்பதாகும்.

- இந்த கூடுகையானது டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பத்தாண்டு காலத்திற்குள்ளான முதல் நடவடிக்கையாகவும் டிஜிட்டல் இந்தியாவை நோக்கிய பாதையை விரிவாக்கம் செய்வதாகவும் கருதப்படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## ரோஷிணி செயலி

- பார்வையற்றோருக்கு ரூபாய் நோட்டுகளை அடையாளம் காண்பதற்கு உதவும் ரோஷிணி எனும் செயலியை IIT-ரோபர் ஆனது உருவாக்கியுள்ளது.
- இந்த செயலியானது பழைய மற்றும் புதிய ரூபாய் நோட்டுகளை அடையாளம் கண்டு உங்கள் கையில் வைத்திருப்பது எந்த ரூபாய் நோட்டுக்கள் என்பது பற்றிய தகவல்களை ஒலி வடிவில் வழங்கும்.
- இந்திய ரூபாய் நோட்டுக்களை அடையாளம் காணும் முதல் ஆண்ட்ராய்டு செயலி ரோஷிணி ஆகும்.

## புதிய கதிரியக்க எதிர்ப்பு ஏவுகணை

- இந்தியாவில் உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட முதல் அடுத்த தலைமுறை கதிரியக்க எதிர்ப்பு ஏவுகணையானது (Next Generation Anti-Radiation Missile -NGRAM) ஒடிசாவின் பாலசோரில் உள்ள ஏவுகணை சோதனைப் பகுதியில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
- நிலத்திலிருந்து வானுக்குப் பாயும் ஏவுகணையாக DRDO அமைப்பால் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணையானது சுகாய்-30 MKI போர் விமானத்திலிருந்து செலுத்தப்பட்டது.
- இந்த அடுத்த தலைமுறை ஏவுகணையானது 100 கி.மீ. தொலைவுக்கு இலக்கைத் தாக்கும் திறனுடையது.
- ரஷ்யாவுடன் இணைந்து ஒலியை விட வேகமாக செல்லும் மீயொளி ஏவுகணையான பிரமோஸ் என்ற ஏவுகணையை உருவாக்கிய பிறகு DRDO-ஆல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நிலத்திலிருந்து வானுக்குப் பாயும் முதல் ஏவுகணை இதுவேயாகும்.

# மாநிலச் செய்திகள்

## ஜீபன் சம்பர்க் திட்டம்

- ஒடிசாவின் முதல்வர் வருடந்தோறும் நடைபெறும் ஆதிவாசி மேளாவின் 2019 ஆம் ஆண்டு விழாவில் ஒடிசாவின் “குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுக்களின்” (Particularly Vulnerable Tribal Groups-PVTG) நலனுக்காக ஜீபன் சம்பர்க் என்ற திட்டத்தை அறிவித்துள்ளார்.
- யுனிசெப்பின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் இந்த திட்டமானது ஒடிசாவில் உள்ள “குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினரிடையே” விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- திறன் மேம்பாடு, சமூகத்தினருக்கு அதிகாரமளித்தல், குழுக்களுக்கிடையே புத்தாக்கம் மற்றும் ஒத்துழைப்பை அளித்தல் ஆகியவை இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.
- ஒடிசா மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான PVTG மக்கள் காணப்படுகின்றனர்.
- 1975 ஆம் ஆண்டு தேபர் ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் PVTG எனும் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இண்டிகோ விமான நிறுவனத்தின் புதிய தலைமை செயல் அதிகாரி

- அனுபவமிக்க விமானத் துறை நிபுணரும் முன்னாள் யுனெடெட் ஏர்லைன்ஸின் தலைவருமான ரோனோஜாய் தட்டா இண்டிகோ ஏர்லைன்ஸின் புதிய தலைமை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவர் ஆதித்யா கோஷ்க்கு அடுத்ததாகப் பதவியேற்றுள்ளார்.
- மேலும் இண்டிகோவானது செபியின் முன்னாள் தலைவரான M. தாமோதரனை நிர்வாக மன்றத் தலைவராகவும் நிர்வாகமல்லாத சுயாதீன இயக்குநராகவும் நியமித்துள்ளது.

- - - - - - - - - - - - - - -